# தமிழ் முல்லை


ஒக்லஹோமா தமிழ்ச் சங்கம் வழங்கும் இருபத்தி ஏழாவது
தமிழ்க் கூட்டம்

## 2015










Email: oktamilsangam@gmail.com
facebook.com/groups/oktamilsangam


Dharshini Mala Anand Moorthy
(B.A(Hons) in Bharatnatyam
Bharatnatyam Dancer
Anand Natyalayas
Tel No:- 918-409 4344
3021, W Elgin Pl, Broken Arrow,
OK 74012, USA

# தலைவர் மடல்

வணக்கம் !

ஒக்லஹோமா தமிழ்ச் சங்க அமைப்புக் குழு மற்றும் செயற்குழு சார்பாக 27ஆவது தமிழ் கூட்டத்திற்கு உங்கள் அனைவரையும் பெரும் மகிழ்ச்சியோடும் உற்சாகத்துடனும் வரவேற்கிறேன்.

*1988* ஆம் ஆண்டு சில உயர்ந்த உள்ளங்களால் தொடங்கப் பட்ட இந்த தமிழ்க் கூட்டமானது , முன்றே வருடங்களில் தமிழ்ச் சங்கமாக உருவெடுத்தது. இன்றைய அளவில் இலாப நோக்கற்ற அமைப்பாக இயங்கி வருகிறது. இளைய தமிழ்ச் சமுதாயம் தமது கலாச்சாரம், பண்பாடு, வரலாறு ஆகியவை குறித்த அறிவையும், தெளிவையும், பெருமிதத்தையும் கொண்டு இருத்தல், அவர்களின் எதிர்கால வளர்ச்சிக்கு மிக அவசியமான ஒன்றாக ஒக்லஹோமா தமிழ்ச் சங்கம் காண்கிறது.

இதன் அடிபடையில் தமிழ்க் கலாச்சாரத்தை சார்ந்த இசை, நாடகம், நாட்டியம் உள்ளிட்ட பல தனித்திறமைகளையும் படைப்புத்திறன்களையும் பெருமையுடன் வெளிபடுத்த, குழந்தைகள் முதல் பெரியவர்கள் வரை அனைவருக்கும் ஒக்லஹோமா தமிழ்ச் சங்கம் அரங்கம் அமைத்து தருகிறது.

சிறுவர்கள் இடையில் திருக்குறள் பற்றிய விழுப்புணர்வும் ஆர்வமும் ஏற்படுத்தும் வகையில் போட்டிகள் நடத்தி பரிசுகள் அளித்து வருகிறது. மேலும் தங்கள் எழுத்து மற்றும் கற்பனை திறன்களை வெளிப்படுத்தும் வகையில், தமிழ் முல்லை பதிப்பை வெளியிடுகிறது.

இத்தகைய செயல்பாடுகளை நாம் இன்னும் திறன்பட செய்ய நாம் சங்க உறுப்பினர் எண்ணிகையை மேலும் வலுப்படுத்திக் கொள்ள வேண்டும். இதுவரை உறுப்பினர்களாக இல்லாதவர்கள் இந்த ஆண்டு பதிவு செய்யவும், புதிதாக வந்திருக்கும் நண்பர்களை பதிவு செய்ய ஊக்குவிக்கவும் கேட்டு கொள்கிறேன். தன்னார்வ தொண்டர்களாக விரும்புபவர்கள் செயற்குழு உறுப்பினர்களை அணுகவும்.

இந்த ஆண்டு வெற்றிகரமாக கலை நிகழ்ச்சிகள் நடக்கக் காரணமான நடன பயிற்சி ஆசிரியர்களுக்கும் பெற்றோர்களுக்கும், தமிழ் முல்லையை உருவாக்க உதவிய அணைத்து விளம்பரதாரர்களுக்கும் கதை, கவிதை, கட்டுரை ஆசிரியர்களுக்கும் எங்கள் மனமார்ந்த நன்றி.

தினேஷ் ஸ்ரீனிவாசன்

*சங்கத்தலைவர், அக்டோபர், 2015*

## Oklahoma Tamil Sangam Officers 2015 - 2016

| | |
|---|---|
| **President:** | Dinesh Srinivasan |
| **Vice President:** | Dr Lakshminarayanan Ramakrishnan |
| **Secretary :** | Rajaperumal Ramachandran |
| **Treasurer:** | Sivakumar Balasubramaniam |

**Executive Committee**

Anand Pandu
Radji Narasimhan
Govindan Kumaraguru
Meenakshi Sundaram (Board of director's representative)

# ஒரு பத்திக் கதைகள்

கோவிந்தன் குமரகுரு

## பாடம்

மாணவர்களே! இந்த கதையில் இருந்து நாம பெரியவர்களுக்கு மரியாதை குடுக்கணும்னு தெரியுது. மாலை வீடு திரும்பினார் ஆசிரியர். வீட்டு முற்றத்தில் அமர்ந்திருந்த அவர் அம்மாவை பார்த்து, ஏய் கிழவி! கொஞ்சம் ஓரமா போய் உக்காரு என்றார். காபி கோப்பையை அவரிடம் கொடுத்துகொண்டே மனைவி கேட்டாள், ஏங்க இன்னைக்கி என்ன பாடம் எடுத்தீங்க? ஏனோ ஆசிரியருக்கு இன்று காபி ரொம்ப சூடாக பட்டது.

## குற்றமே தண்டனை

தீவிரவாதி சகாக்களிடம் சொன்னான், திட்டமிட்டபடி ஆஸ்பத்திரி வாட்டர் டாங்கில் ஸ்லோ பாய்சன் கலந்தாச்சு இந்நேரம் அங்க சுடுகாடு மாதிரி இருக்கும், இந்த மலையோர கிராமங்கல சுத்தி இருக்கறதே அந்த ஒரு ஆஸ்பத்திரி தான், இங்க இருந்து போக, வர பல மணி நேரம் ஆகும், இன்னைக்கு மாலை செய்தி பேய் அரஞ்ச மாதிரி இருக்கும், அவன் சொல்லிகொண்டு இருக்கும் போதே அவன் மனைவி ஓடி வந்தால், நம்ப பையனுக்கு என்னமோ ஆகிடுச்சு, மயங்கி விழுந்துட்டான், சீக்கிரம் வாங்க ஆஸ்பத்திரி போகணும், செய்வதறியாது விழித்தான் தீவிரவாதி.

## வாழ்க்கை விளையாட்டு

விமல் நாள்தோறும் train ல் ஆபீஸ் செல்லும் இளைஞன். அன்று கை பேசியில் விளையாடிகொண்டே train ல் இருந்து இறங்கி பிளாட் பாரம் கடக்கையில் வேகமாக மோதியது எதிரே வந்த இன்னொரு train, தூக்கி எறியப்பட்டான், அவனுடைய கைபேசி தூரமாய் போய் விழுந்தது......அதில் Subway Surf இளைஞன் பல train களை தாண்டி ஓடிக்கொண்டு இருந்தான் இன்னும் வேகமாய்.....

## இதுவும் வெற்றியே!

விவேக் சிறந்த துப்பறியும் நிபுணர், ஒரு புதிரான கேஸ் அவரது கண்டுபிடிப்பில் ஈசி ஆக முற்று பெற்றதில் நேற்று அவருக்கு ஆபீஸில் கிடைத்த பாராட்டு பற்றி அவர் மனைவியிடம் சிலாகித்து சொல்லிக்கொண்டு இருந்தார், சரி இது எல்லாம் உனக்கு எங்க புரிய போகுது என்று சொல்லி கொண்டு வெளியே போக கிளம்பினார். கொஞ்ச நேரம் கழித்து அவர் மனைவியை கூப்பிட்டார், இந்த கார் சாவிய எங்க வச்சேன்னு தெரியல, ரொம்ப நேரமா தேடறேன் கிடைக்கல என்றார். புன்முறுவலுடன் அவர் மனைவி சமையலறை மேடையில் இருந்த சாவியை எடுத்து வந்து கொடுத்தார்.

## பேய் படம்

நவீன் தன் நண்பர்கள் மூன்று பேருடன் அந்த மேன்ஷனில் தங்கி இருந்தான். நவீன் சொன்னான், இன்னைக்கு எப்படியும் இந்த பேய் படத்த பாக்கறோம், DVD வாங்கிட்டு வந்து ரொம்ப நாள் ஆச்சு, என்று சொல்லிக்கொண்டே DVD ஐ பிளே பண்ணினான், கொஞ்சம் பயம், கொஞ்சம் ஸ்நாக்ஸ் அப்புறம் இடைவேளை வந்தது. நண்பர்களில் ஒருவன், டேய் பசி வயத்த கிள்ளுதுடா, இருங்க நாயர் கடை திறந்திருக்கானு பாக்கறேன், சொல்லிக்கொண்டே ஜன்னல் பக்கம் வந்தவன் மிரட்சியுடன் சொன்னான், டேய் கண்ணுக்கு எட்டிய தூரம் வரைக்கும் எங்கயும் கரண்ட் இல்லடா...... நால்வர் கண்களும் டிவி ஐ பார்த்தது பயத்தின் உச்சத்தில்...

# சமையல் குறிப்பு

கபிலா பாலசுந்தரம்



## நண்டு மசாலா

தேவையான பொருட்கள்

| | | |
|---|---|---|
| நண்டு | : | 1 கிலோ |
| தேங்காய் | : | 1 மூடி |
| பூண்டு (தோல் உரித்தது) | : | 5 |
| மிளகு | : | 2 ஸ்பூண் |
| சோம்பு | : | 1 ஸ்பூண் |
| சீரகம் | : | 1 ஸ்பூண் |
| எண்ணெய் | : | 1 குழி கரண்டி |
| உப்பு | : | தேவையான அளவு |



### செய்முறை:

முதலில் நண்டை நன்கு சுத்தம் செய்து கழுவி கொள்ளவேண்டும். பிறகு தேங்காய் , பூண்டு, மிளகு, சோம்பு, சீரகம் இதை அனைத்தையும் நன்கு மீக்சியில் அரைத்து கொள்ளவேண்டும். அடுப்பில் கடாய் வைத்து, எண்ணெய் ஊற்றி, எண்ணெய் சூடானதும் சோம்பு தாளித்து பிறகு நண்டை போட்டு அதில் அரைத்த விழுதை போட்டு 1 ஸ்பூண் மிளகாய் தூள் தேவையான அளவு உப்பு சேர்த்து நன்கு கிளறி 10 நிமிடம் சிறிய தீயில் வேகவைத்து இறக்கவேண்டும். சுவையான நண்டு மசாலா தயார்.

### பலன்கள்:

இதில் கால்சியம் சத்து அதிகம் உள்ளது . சளி, இருமலுக்கு இது மிகவும் நல்லது .

## பேசில் பாஸ்தா

தேவையான பொருட்கள்

| | | |
|---|---|---|
| பேசில்இலை | : | ஒரு கட்டு |
| பூண்டு | : | 10 பற்கள் |
| வால்நட் | : | 50 கிராம் |
| பார்மசான் சீஸ் | : | 30 கிராம் |
| ஆலிவ் ஆயில் | : | தேவையான அளவு |
| எலுமிச்சை | : | 1 |
| மிளகு | : | 10 கிராம் |
| உப்பு | : | தேவையான அளவு |
| பிளாக் ஆலிவ் | : | 25 கிராம் |
| தக்காளி | : | 50 கிராம் |
| வெங்காயம் | : | 75 கிராம் |
| ப்ரஷ்கிரீம் | : | 30 கிராம் |
| பாஸ்தா | : | 200 கிராம் |



### செய்முறை:

முதலில் பாஸ்தாவை கொதிக்கும் நீரில் 1 ஸ்பூன் ஆலிவ் ஆயில் விட்டு 10 நிமிடம் வேகவைத்து எடுத்துக்கொள்ளவேண்டும். பிறகு மிக்சி ஜாரில் பேசில் இலைகள், வால்நட் பூண்டு, பார்மசான் சீஸ், ஆலிவ் ஆயில், எலுமிச்சை சாறு, மிளகுதூள் சேர்த்து நன்கு அரைத்துக் கொள்ள வேண்டும். பிறகு அடுப்பில் கடாய் வைத்து ஆலிவ் ஆயில் விட்டு பொடிதாக நறுக்கிய பூண்டை போட்டு வதக்க வேண்டும். பிறகு நன்கு சிறயதாக நறுக்கிய வெங்காயம் சேர்த்து வதக்க வேண்டும். பின்பு அதில் அரைத்த விழுதை போட்டு பச்சை வாசனை போகும் வரை நன்கு வதக்க வேண்டும். பிறகு ப்ரஷ்கிரீம், வேகவைத்த பாஸ்தாவை அதில் போட்டு கிளறி உப்பு சேர்க்க வேண்டும். பிறகு அதில் நறுக்கிய தக்காளி, பிளாக் ஆலிவ் சேர்த்து நன்கு கிளறி இறக்கவேண்டும். பரிமாறும் போது அதில் பார்மசான் சீஸ் மேலே தூவி பரிமாறவும்.




# COMBINING POLICIES. THE SMART WAY TO SAVE.

**Multiple Ways To $ave**

Combining Auto and Home is just one of many ways to save.

At FARMERS, providing you with multiple ways to save on insurance coverage that's right for you is our specialty. Combining policies is yet another way. Call me today to discuss this and other valuable discount offers that can help you save big with Farmers Insurance.

$ CURRENT SAVINGS OFFERS

Your local Farmers agent currently offers savings for:

- AUTO
- HOME
- LIFE
- BUSINESS

**GET SMART AND SAVE HUNDREDS WITH FARMERS MULTI-POLICY DISCOUNTS!**

**918.459.5051**

**TODD GILLETT**

Your Local Agent

10106 E 79TH ST STE A
TULSA, OK 74133
TGILLETT@FARMERSAGENT.COM

FARMERS INSURANCE

# மில்லினியல் தலைமுறை

*சிறுகதை - பிரியா தினேஷ்*



நேரம் ஓடிக்கொண்டே இருந்தது. வீட்டு வேலைகள் முடித்து, சமையல் செய்து விட்டு திரும்பி பார்த்தால் மணி 11 ஆகிவிட்டிருந்தது.

" அம்மா! அந்த ஐவரி சூட் கொஞ்சம் எடுத்து வச்சிடு சாயந்தரம் பியானோ ரிசைட்டல்–க்கு வேணும். வேற டிரஸ் எடுத்து வச்சின்னா ஒத்துக்க மாட்டேன்." விஜய் கூறியது காதில் ஒலித்துக்கொண்டிருந்தது.

டீன் ஏஜ் முடியப்போகுது இவனுக்கு, இன்னும் எல்லாத்தையும், நாம பண்ண வேண்டி இருக்கு. சரி முதல்ல குளிச்சிட்டு வந்திரலாம். குளியல் முடித்து நெற்றியில் குங்குமம் இட்டு, விளக்கேற்றி விட்டு வந்தேன்.

சூட் அலமாரியில் தானே இருந்தது! எங்கே போச்சு? வெகுநேரம் தேடியும் கிடைக்கவில்லை. கணவருக்கு போன் செய்தால், "ஏண்டி! மீட்டிங் போது கூப்பிடுறியே, ரொம்ப முக்கியமா இப்போ? எதையாவது ஒன்ன எடுத்து வைக்க வேண்டியது தானே. இதுக்கு ஒரு போன் வேற! அவன் சொல்றதுக்கு எல்லாம், நீ ஆடுற! இரு, உன்ன வந்து பேசிக்குறேன், போன்–ஐ வை."

'ஓ.கே., நார்மல்–லாதான் இருக்காரு. இவரு இப்படி பேசலேன்னாதான் கவலைப்படணும்.'

பெட்ரூம், பீரோ, அந்த ரூம், இந்த ரூம் எல்லா இடத்திலும் தேடி கடைசியாக அவரோட 'சூட்'–களுக்கு அடியில இருந்தது. இதுக்கெல்லாம் 'சேர்ச்' பட்டன் இருந்தா நல்லா இருக்கும் இல்ல.

"யூடியுப்"–ல பாட்டு ஆன் செஞ்சிட்டு அயர்ன் பாக்சை எடுத்தேன். "வெள்ளை பூக்கள் உலகம் எங்கும் மலர்கவே...விடியும் பூமி அமைதிக்காக விடிகவே...", ஏ.ஆர்.ரஹ்மான் பாடல் இசை வழிந்து கொண்டிருந்தது. எப்படி இவரல மட்டும் இப்படி டிவைன் மியூசிக் கம்போஸ் பண்ண முடியுது, வியந்து கொண்டே, வேலை செய்தேன்.

அது சரி நேத்து இவனுக்கு காவ்யான்னு ஒரு பொண்ணு போன் பண்ணுச்சே, அது யாரா இருக்கும்? இது வரைக்கும் இந்த பேர்ல யாரும் பேசினது இல்லியே. இப்போ எல்லாம் என்னமோ பாய் ப்ரெண்ட், கேர்ள் ப்ரெண்ட் –னு சொல்லுறாங்களே! என்ன கிரகமோ! நமக்கு ஒன்னும் புரியல! நல்ல ப்ரெண்ட்–ஆ இருந்தா சரி! யோசித்துக் கொண்டே அயர்ன் செய்தேன்.

அடக்கடவுளே! இது என்ன சிகப்பா ஏதோ! எங்கே இருந்து வந்தது? ஐவரி சூட்–டில் கறை ஆகிவிடுமே! எப்போதும் போல் பதட்டப்பட்டு, விரல்களால் துடைத்தேன், அது சட்டென மஞ்சள் நிறமானது. புரிந்ததும், நாக்கை கடித்துக்கொண்டேன். என் நெற்றியில் இருந்த மஞ்சள் குங்குமம்.

போச்சு வானத்துக்கும் பூமிக்கும் குதிப்பானே. என்ன பண்ணியும் கறை தெரியத்தான் செய்தது. அட்ஜஸ்ட் பண்ணிகிட்டான்னா பரவாயில்லை. அவன் வருவதற்கு காத்திருக்காமல் அதை "க்ளிக்" செய்து வாட்ஸ் ஆப்–பில் அனுப்பினேன். "ஆங்ரி ஸ்மைலி" அனுப்பி இருந்தான். நான் தலையில் அடித்துக் கொள்ளும் 'ச்மிர்க்' ஸ்மைலி ஆனேன்.

"அம்மா! அம்மா! என கத்திக் கொண்டே படி ஏறினான். வரும்போதே பையை ஒருபுறம் தூக்கி எறிந்தான். செல்போன், கவுச் மீது பறந்தது. 'என்னம்மா இப்படி பண்ணிட்டியே மா' என்று நெடுநேரம் புலம்பி கொண்டிருந்தான்.

# மில்லினியல் தலைமுறை

*சிறுகதை - பிரியா தினேஷ்*

'என்ன இப்படி புலம்புறான், ஒருவேளை அந்த காவ்யாவுக்கு பிடித்த கலரோ ?' மனம் நினைத்தது. "சரிடா தெரியாம ஆகிடுச்சு, விடேன்டா!" என்ற என்னை முறைத்துகொண்டே சென்றான்.

திருமணம் ஆகி ஆறு வருஷம் குழந்தை இல்லாமல், அதுக்கு அப்புறம் பிறந்தவன் விஜய். இவனை எப்படி எல்லாம் வளர்க்கணும்னு நினைச்சிட்டு இருக்கோம்.. இவன் என்னடான்னா இப்படி இருக்கானே! "ம்" பெருமூச்சு விட்டேன்.

எப்படியோ விஜய் ஒரு வழியாய் சமாதானம் ஆகி, அந்த சூட்–ஐ அணிந்து பியானோ நோட்சை எடுத்துக் கொண்டு தயார் ஆனான். "அம்மா! நான் முன்னாடி போறேன். டெகரேஷன்–க்கு கொஞ்சம் ஹெல்ப் பண்ண சொல்லி மாஸ்டர் கேட்டாரு.

அப்புறம், ப்ரோக்ராம்–க்கு டைம் இருக்கும் போது "டெக்ஸ்ட்" பண்றேன்! அப்போ நீங்க எல்லாம் கிளம்பி வந்தா போதும்! அவன் முகத்தில் எந்த சலனமும் இல்லாமல் கூறினான், ஆனால் மகிழ்ச்சியும் இல்லாதது உறுத்தியது.

"ச்சே! கொஞ்சம் ஜாக்கிரதையா அயர்ன் பண்ணி இருக்கலாம்! அடுத்த வாட்டி என்கிட்டே குடுத்தான்னா, ஒழுங்கா பண்ணனும்.

டின்னர், பங்க்ஷன்–லங்கறதால சமையல் வேலை இல்ல. ராக்கிங் சேர்ல உக்காந்து புத்தகம் படிச்சிட்டு இருந்தேன்.


திடீர்னு விஜய் குரல் கேட்டது. 'என்ன இவன், எதையாவது மறந்து வச்சிட்டானா ?'


படி இறங்கி அவனை பார்த்ததும், அலறினேன். "டேய் விஜய்! என்னடா இது மேல எல்லாம் ஒரே ரத்தம்." முதலில் அரண்டுதான் போனேன். ஆனால் அவன் நிதானமாக இருப்பதை கண்டு ஓரளவு யூகிக்க முடிந்தது.

விஜய்–யே சொன்னான்," ஒன்னும் இல்லம்மா! பயப்படாத. நம்ம ஜெகன் இல்ல, ஸ்டேஜ் டெகரெட் பண்ணும் போது தவறி விழுந்துட்டான், ட்ராலி கம்பி கிழிச்சு...நல்ல வேளை ! ஆபத்து ஒன்னும் இல்ல, ஆனா ரொம்ப ப்ளீட்டிங் ஆகிடிச்சு. பாவம்மா! மயங்கி விழுந்திட்டான், அவன தூக்கிட்டு போனேனா, அப்போதான் மேல எல்லாம் இப்படி....அப்புறம் முதலுதவி செஞ்சு ஹாஸ்பிடல்–க்கு கூட்டிட்டு போய்ட்டாங்க.

மாஸ்டர் தான் என்ன வீட்டுக்கு போய் டிரஸ் மாத்திட்டு வர சொன்னார். "சரி! சரி! வேற சூட் எடுத்து தரேன், கொஞ்சம் சீக்கிரம் அயர்ன் பண்ணி தரியா அம்மா!" என்று முடித்தான்.

நான் விக்கித்து நின்றாலும் என்னை அறியாமல் தலை அசைத்தேன் போலும், "தேங்க்ஸ் மா!" என்று குளியல் அறைக்குள் சென்றான் விஜய்.






**Timings**

**Mon to Thu - 11:30 a.m to 9:00 p.m**

**Fri & Sat - 11:30 a.m to 10:00 p.m**

**Sun – 11:30 a.m to 9:00 p.m**

# ALL DAY LUNCH/DINNER BUFFET

## 5% OFF ON YOUR NEXT CATERING ORDER.

Order should be worth $500 or more.


Expires: December 31, 2015

**HIMALAYAS**

4844 s memorial dr
tulsa, OK 74145

9182701445
www.himalayasok.com/

# இளம் ஓவியர்கள்





ஹரிணி



ஈதன் கிஷோர்




ஹரிணி




ஹரிணி

# இளம் ஓவியர்கள்

**NAME: LAKSHMISHREE SIVAKUMAR**
**AGE: 8**



லக்ஷ்மிஸ்ரீ சிவகுமார்

இருபத்தி ஏழாவது தமிழ்க்
கூட்டத்திற்கு உங்கள்
அனைவரையும் வரவேற்கிறோம்

ரா. ராகவ்
ரா. ரம்யா

ராகவ் ராஜபெருமாள் –
மழலை நிலை, தல்சா
பெருநகரத் தமிழ்ப் பள்ளி




8242 E 71st Street, Tulsa, OK 74133 - Phone (918) 994-7404
All you can Eat Lunch Buffet Daily. Monday Closed.

# தமிழர் உணவு

ஹரிஷ் வைத்தியநாதன்

## ஆரோக்கிய தமிழர் உணவுகள்

சமீபக் காலங்களில் மீடியாக்களில் மக்களின் அதிகக் கவன ஈர்ப்பு, ஆரோக்கிய உணவுகளே. அது மட்டும் அல்லாமல் பாரம்பரிய உணவகங்களே மிகவும் பிரபலமாகி வருகின்றன.



இன்றைய வாழ்க்கைச் சூழலில் நம்மால் நம் சுற்றுப்புறச் சூழல், வேலை பளு, மன அழுத்தம் ஆகியவைகளைத் தவிர்க்க இயலாது. அதனால் நம் ஆரோக்கியத்திற்காக உணவுப் பழக்கங்களையாவது நம்முடைய கட்டுப்பாட்டில் வைத்து கொள்ள வேண்டும்.

ஆதலால், நம் தாத்தா, பாட்டிகளின் ஆரோக்கிய உணவு வழக்கங்கள் சிலதை உங்களுடன் பகிர்கிறேன்.

முதலில் நீர் ஆகாரம், இரவில் அரிசி சோற்றில் நீர் ஊற்றி ஊற வைத்து, காலையில் வெறும் வயிற்றில் அதனுடன் உப்புச் சேர்த்துப் பருகுவதே. இதனால் ரத்த அழுத்தம் குறைவதாக ஆராய்ச்சிகள் கூறுகின்றன. சமீபத்தில் அமெரிக்கப் பல்கலைக் கழக ஆராய்ச்சியும் இதனால் பல உடல் கேடுகள் சரியாவதாகத் தெரிவித்துள்ளது.

அடுத்தது, கேழ்வரகு, இதை கூழ் ஆகவோ, கஞ்சி, புட்டு, அடை என்று பல வகையிலும் நம் உணவில் சேர்த்தால் நரம்பு சம்பந்தப்பட்ட நோய்கள் உண்டாகாது என்பதே சான்று.

மேலும் சிறு தானிய உணவுகள், வரகு, சாமை, தினை, கம்பு, சோளம் ஆகியவற்றை அரிசிக்குப் பதிலாக சோறாகவோ, தின்பண்டங்கள் செய்தோ உண்டால் கொழுப்பு குறைவதுடன், நீரழிவு நோய் வராது என்கிறது அறிவியல் ஆராய்ச்சிகள்.

அடுத்தது பயறு வகைகள்: காராமணி, கொண்டை, மொச்சை போன்றவை. இவற்றை அவித்து உண்பதே சிறந்தது. இதில் மிகுந்தப் புரதச் சத்து உள்ளது.

இவ்வகை உணவுப் பழக்கங்களே நம் வீட்டுப் பெரியோர்கள் ஆரோக்கியமாகவும், திடமாகவும் இருக்க உதவியது.

ஆரோக்கிய உணவு உண்டு, மாத்திரைகள் உண்பதைத் தவிர்ப்போம்!

ஒவ்வொரு நாளையும் இனிதே நீர் ஆகாரத்துடன் ஆரம்பிப்போம்!

ஹரிஷ் வைத்தியநாதன்
நான்காம் வகுப்பு,
யூனியன் பள்ளி,
தல்சா.


இருபத்தி ஏழாவது தமிழ்க் கூட்டத்திற்கு எங்களது மனமார்ந்த வாழ்த்துக்கள்!
தல்சா பெருநகரத் தமிழ்ப் பள்ளி ஆசிரியர்கள், பெற்றோர் மற்றும் மாணாக்கர்கள்.

தல்சா பெருநகரத் தமிழ்ப் பள்ளி ★ Tamil School of Greater Tulsa ★ கற்போம் கற்பிப்போம்

Tamil School of Greater Tulsa
Affiliated to American Tamil Academy
Weekly Tamil Classes on every Saturday
Contact Information: Anand Pandu, Principal
Ph:(918) 324 - 6204 - Email: tamilschoolgt@gmail.com

# 3..2.. ...!

*சிறுகதை - கிருஷ்ணா, விசித்தா பால்ஸ், டெக்சாஸ்*



ஒரு ஞாயிற்றுக்கிழமை மாலை, என்ன பண்ணலாம் என்று படுக்கையில் உட்கார்ந்த படியே யோசித்துக் கொண்டிருந்தேன். சூரியனின் இளஞ்சிவப்பு கதிர்கள் என் படுக்கை அறை ஜன்னல் வழியாக உள்ளே வர ஆரம்பித்தன. "இது ஒரு பொன் மாலை பொழுது.." என்று மெதுவாக நான் பாட ஆரம்பித்தேன் ... என் செல்போன் அலறியது. " சொல்லுடா மணி" என்றேன்.

" டேய் இப்போ உன்னால உடனே பீச் பக்கம், நாம வழக்கமா சந்திக்கிற இடத்துக்கு வர முடியுமா ?" என்று கேட்டான்.

அவன் பேச்சில் ஒரு படபடப்பும், அவசரமும் தென்படவே, உடனடியாக புறப்பட்டேன். அன்று என்னமோ தெரியலை, கடற்கரை முழுக்க ஆள் நடமாட்டமே இல்லை. " ஏதாவது போராட்டமா ? கடையடைப்பா ?" என்று யோசித்துக் கொண்டே நடக்கும் பொழுது, தூரத்தில் மணி மணலில் உட்கார்த்து, ஏதோ பறி கொடுத்தவன் போல், அலையையும், சூரியனையும் பார்த்துக் கொண்டிருந்தது தெரிந்தது.

ஓடி அவன் அருகில் போய் நின்று, " என்ன ஆச்சு ? ஏன் இப்படி இருக்கே ?.. நான் அப்பவே சொல்லலை, அவள் சரி பாட மாட்டா.." என்று நான் பேச ஆரம்பிக்கும் பொழுதே, அவன் என் பக்கம் திரும்பி " எனக்கு ஒரே குழப்பமா இருக்குடா. இப்போ பொழுது சாயப் போகுதா ? இல்லை விடிய போகுதா ?", என்று பித்து பிடித்தவன் போல் என்னைப்பார்த்து கேட்டான்.

இந்த கேள்வியை நான் சற்றும் எதிர்பார்க்கவில்லை. " என்ன உளர்ற, இப்போ பொழுது சாய போகுது" என்றேன்.

" எதை வச்சு நீ சொல்ற ?"

" இன்னும் கொஞ்சம் நேரத்துல இருட்டும் பாரு, அப்ப உனக்கு புரியும். அத விடு, இந்த நேரத்துல உனக்கு தனியா இங்க என்ன வேலை ? " என்று கேட்டேன்.

அவன் அப்படியே தலை குனிந்து தன் முடியை இருக்க பிடித்து " காலைல ஜாக்கிங் போக வந்தேன். அப்புறம் என்ன நடந்தது என்று தெளிவா தெரியலை. மூன்று சம்பவங்கள் மட்டும் நினைவுக்கு வந்து போகுது... " என்று சொல்லி சிறிது மௌனத்திற்குப் பிறகு " டேய், என்ன தனியா விட்டு எங்கயும் போகாதடா." என்று புலம்பினான்.

"உன்ன வீட்டுல விட்டுத்துதான் எனக்கு மறு வேலையே. வெயில்ல மூளை குழம்பி போய் இருக்கு உனக்கு." என்று கிண்டலாக சொன்னதை கூட அவன் கவனிக்க வில்லை.

அவன் இப்படி என்றும் பேசியதில்லை என்பதால் சற்று நிதானமாக. "சரி, என்ன நினைவுகள் மனசுக்கு வந்து போகுது ?" என்று அவனிடம் கேட்டேன்.

பொறுமையாக தலையை உயர்த்தி, என்னை பார்த்து மெதுவாக சொன்னான். "மூணாவதா, நான் ஏதோ ஒரு ராக்கெட்ல உட்கார்ந்து கொண்டு இருக்கேன். என் கை, கால்கள் இரண்டும் வித்யாசமான சேர்இல் கட்டி போட்டிருக்கு. ஒரு விதமான சத்தம், எங்கயோ வேகமா போகிறா மாதிரி இருந்துச்சு."


# 3..2.. ...!

சிறுகதை - கிருஷ்ணா, விசித்தா பால்ஸ், டெக்சாஸ்

" Mani. Are you alright? போன வாரம் நாம போன 'தீம் பார்க்' ஞாபகமா , இல்லை என்னை வச்சு காமெடி பண்றியா?" என்றேன். அதற்கு அவனிடம் இருந்து சிரிப்பு வரவில்லை.

சற்று எரிச்சலுடன் "You are hallucinating. எதோ சரி இல்லை உன்னிடம் " என்று, நான் சொல்ல, சலித்துக் கொண்டே அவன் கால்க்களை காமித்தான். பெரிய சூடு தழும்பு இருப்பதை பார்த்து எனக்கு அதிர்ச்சி. "டேய், எப்படி உனக்கு இப்படி ஆச்சு?" என்று கேட்டேன்.

" இப்போவாது என்னை நம்பு டா.. இரண்டாவதா, வேகமா பூமியை நோக்கி வரா மாதிரி இருந்துச்சு. ஒரே கூச்சல்.. குழப்பம். குக்கர் உள்ளாரே உட்காந்த மாதிரி அப்படி ஒரு சூடு. என்னை இருக்க பிடித்த அந்த சங்கிலியே, என் உடம்பை எரிச்சா மாதிரி இருந்துச்சு." என்று அவன் சொல்ல சொல்ல, அவன் குரல் உடைந்தது. "நானும் முதலில் என்னமோ என்று நினச்சேன். ஆனால், காலில் உள்ள வலி உண்மை."



அவனுக்கு ஆறுதலாக என்ன சொல்வது தெரியாமல், "அப்புறம் என்ன ஆச்சு??" என்று கேட்டேன்.

அவன் கண்களில் கண்ணீருடன் " அவங்க வந்து... அவங்க வந்து.." என்று பயத்துடன் ஏதோ சொல்ல வந்தான். அவன் உடம்பு முழுவதும் நடுங்கியது. முகம் வெளிறி போய் இருந்தது.

" பயத்தினால் முகம் இப்படி வெளிறி போகுமா?" என்று யோசித்தேன். அப்பொழுது தான் எனக்கு அது உதித்தது. இதுவரை அவனிடம் இருந்த பயமும், நடுக்கமும் எனக்கும் வந்தது.

" இந்த நேரத்தில் எப்படி இவ்வளவு வெளிச்சம்??"

ஒரு வினாடியில் அந்த இடம் முழுவதும் கண்களை கூசும் வெளிச்சம் படர்ந்தது. திடீர் என்று நிழல் போல் ஓர் உருவம் என் தோள்களை பிடித்தது. என்னால் தடுக்க முடியவில்லை. கைகள் இரண்டும் செயல் இழந்தது போல இருந்தன.

"அவங்களே தான்.. அவங்களே தான்.. ஓடு ஓடு ." என்று தூரத்தில் மணியின் குரல் ஒலித்தது.

" இல்லை இல்லை... என்னை விடு.. விடு... " என்று நான் அலறிக்கொண்டே எழுந்தேன். முகம் முழுக்க வியர்த்து இருந்தது. சூரியனின் இளஞ்சிவப்பு கதிர்கள் என் ஜன்னல் வழியாக வருவதை பார்த்து, மனதிற்குள் மூன்று கேள்விகள் ஒரே நேரத்தில் தோன்றின. " இப்போ பொழுது சாய போகுதா? இல்ல விடிய போகுதா?.. யார் அந்த மணி?.. அதை விட முக்கியம், ஏன் என் கால்கள் இப்படி வலிக்குது!!??...."

## திருக்குறள் போட்டி

**நமது சங்கம் சார்பில் வருடா வருடம் நடைபெறும் திருக்குறள் போட்டியில் இந்த வருடத்தின் வெற்றியாளர்கள்:**

Category 1

| First Place | Second Place |
|---|---|
| Aarthikaa Sridhar | Nithilan Sundaram |
| Raghav Rajaperumal | |

Category 2

| First Place | Second Place |
|---|---|
| Harish Vaithianathan | Aadhithia Ayyappan |

Category 3

First Place
Nadesh Vaithianathan





©2015 Kumon North America

# Math. Reading.

# Confidence.

Each time our students tackle and overcome a new challenge, their confidence grows, and they realize they are achieving more than they thought they could. Kumon puts them on the path to becoming the confident, independent, self-reliant people all parents hope their children can be.

**Now's the time for Kumon.**

**Schedule a free placement test now at your local Kumon Math & Reading Center:**

**TULSA - SOUTH CENTRAL**
61st & Memorial
**918.254.5437**
**kumon.com/south-central-tulsa**

**BROKEN ARROW - NORTH**
81st & Aspen
**918.251.5384**
**kumon.com/broken-arrow**

LEARNING FOR THE LONG RUN™

KUMON®

# Members Corner

## Oklahoma Tamil Sangam Life Members

Mr. Anand Moorthy
Mr. Anand Pandu
Mr. Ananth Sundararajan
Dr. Ayyappan Subbiah
Mr. Bala Dandapani
Mr. C. Shanmugamani
Mr. Govindan Kumaraguru
Dr. Hanumantha Rao Jayaram
Mr. Hemanth K. Kumar
Mr. Isaac Samuel
Dr. K. Thulasiraman
Dr. K.C. Sekar
Dr. Lakshminarayanan Ramakrishnan
Mr. Mani (Taj) Raju
Mr. Masil Masilamani
Mr. Nathan Shankar
Mr. Padmanabhan Rajendran
Mr. Periaswamy Balakrishnan
Mr. Prabhakar Krishnamoorthy
Mrs. Priya Raju
Mr. Rajappa Srinivasan
Mr. Rajesh Ganesan
Mr. Rajesh Kanderi
Mr. Rajaperumal Ramachandran
Mr. Ram Sreenivasan
Mr. Rukmangathan Devarajulu
Dr. S. Krishnamurthi
Dr. S. Lakshmivarahan
Dr. Shivakumar Raman
Mr. Sivarama Krishnan
Mr. Sridhar Parameswaran
Dr. Sridhar Radhakrishnan
Mr. Srinivasan Sundaramurthy
Mr. Subramanian R.
Mr. T.L. Parasuram
Dr. T.M. Venkatachalapathi
Mr. T.V. Venkatraman

## Past Presidents of Oklahoma Tamil Sangam

Mr. T.L. Parasuram –1988
Mr. Hemanth K. Kumar
Dr. Hanumantha Rao Jayaram
Dr. K.C. Sekar
Mr. Srinivasan Sundaramurthy
Mr. Rajappa Srinivasan
Mrs. Mathangi Shankar
Mr. C. Shanmugamani
Dr. Ayyappan Subbiah
Mr. K. Meenakshi Sundaram
Mr. Muthu Soundarajan
Mr. Dinesh Srinivasan (2015-2016)

## Members and Sponsors Contribution for Tamil Koottam 2015

| | |
|---|---|
| Dr. S. Krishnamoorthy | $1,500 |
| Dr. Lakshminarayanan | $500 |
| Mr. Arunachalam Alagappan | $100 |
| Mr. Lakshminarasimhan Parthasarathi | $100 |
| Mr. C. Shanmugamani | $100 |
| Mr. Srini Sundaramoorthy | $100 |
| Dr. Ayyappan Subbiah | $101 |
| Mr. Sivakumar Balasubramaniam | $100 |
| Mr. Meenakshisundaram Krishnasamy | $60 |
| Mr. Anand Kilambi | $51 |
| Mr. Karthik Sridharan | $50 |
| Mr. Sabapathy Rhahini | $50 |
| Mr. Prakash Subramaniam | $50 |
| Mr. Nagaraj Ganesan | $50 |
| Mr. Kishore Masilamani | $50 |
| Mr. Ilangovan Chellaya | $50 |
| Mr. Arjun Rajakutty | $50 |
| Mr. Dinesh Srinivasan | $50 |
| Mr. Kumar Gurukkal | $51 |
| Mr. Saravanakumar Parameshvaran | $50 |
| Cumin Tulsa | $100 |
| Kumar Mess Plano | $150 |
| Dr Suresh Bharani | $100 |
| Miss Helens School | $100 |
| Todd Gillett (Agent) | $150 |
| Xyant Technologies | $250 |

## 2015 Sub Committee List

**Cultural committee**
Radji Narasimhan, Meena Govindan and Sujatha Rajesh

**Stage coordination**
Govindan Kumaraguru, Lakshminarasimhan P, Prasad Rangan and Karthick Manohar

**Catering dinner and snacks**
Rajaperumal Ramachandran, Ayyapan Subbiah, Prabakar Krishnamoorthy, Sridhar Swaminathan, Jayprakash

**Thirukkurral Competition**
Anand Pandu, Ram Srinivasan, Mrs. Thillai Lakshmanan, Mrs.Sukunthavalli and Mrs. Lakshmi

**Reception and Ticketing**
Sivakumar Balasubramaniam, Anand Moorthy, Ayyapan Subbiah and Arunachalam Alagappan

**Tamil Mullai**
C. Shanmugamani and Meenakshi Sundaram

**Trophies and Certificates**
Rajaperumal and Vaithianathan

**Master of Ceremony**
Vignesh, Vani, Balasundaram and Rukmangathan.

**Fund raising committee**
OTS Officers



# தமிழ்நாடு அறக்கட்டளை

நடேஷ் வைத்தியநாதன்

## தமிழ்நாடு அறக்கட்டளை (Tamilnadu Foundation)

நாம் வாழ்க்கையில் ஓரளவு உயர்ச்சி அடைந்தவுடன், நம் உறவுகள், நண்பர்கள் தாண்டி, நம்மை வளர்த்த, குறிப்பாக நம் இளவயது காலத்தில் இருந்த சமுதாயத்திற்கு ஏதாவது நம்மால் இயன்ற உதவியைச் செய்ய வேண்டும் என்ற எண்ணம் நம்முன் தோன்றிய வண்ணம் இருக்கும். ஆனால் அதை எப்படி செய்வது, யார் மூலம் செய்வது, அது முழுமையாக பயன் அளிக்கிறதா போன்ற சந்தேகங்களால் அதை அப்படியே நிலுவையில் வைத்து விடுவோம்.




இதற்கெல்லாம் விடையே தமிழ்நாடு அறக்கட்டளை. (`தென்றலில்' வந்த விளம்பரம் மூலம் அறிந்தோம்) இது 1984 ஆம் ஆண்டு அமெரிக்காவில் வாழும் தமிழர்களால் சென்னையில் (கீழ்ப்பாக்கம்) ஆரம்பிக்கப்பட்டது, சில உறுப்பினர்களுடன்.


இன்று, பல அமெரிக்க மாநிலத்தில் உள்ள உறுப்பினர்களுடன், தமிழ்நாட்டில் பல ஒருங்கிணைப்பாளர்கள் கொண்ட முழுமையான ஒரு அமைப்பாக இயங்கி வருகிறது.

கல்வி மூலமே ஒரு சமுதாயத்தை மாற்ற முடியும் என்பதால், இந்த அமைப்பு பல தமிழ்மாவட்டப் பள்ளிகளைத் தத்தெடுத்து ஏழை மாணவர்களுக்கு கல்வி உதவி செய்து வருகின்றன; இதன் மூலம் நீங்கள் படித்தப் பள்ளிக்கோ, உங்கள் கிராமத்தில் உள்ள பள்ளிக்கோ உதவ முடியும். நீங்கள் தேர்ந்தெடுக்கும் பள்ளிக்கு ஒரு ஒருக்கிணைப்பாளரை நியமித்து, கல்வியில் சராசரிக்கு கீழுள்ள மாணவர்களுக்கு ஊக்கம் அளிக்க முடியும். நூலக வசதி, கூடுதல் ஆசிரியர்கள் நியமனம் போன்ற வசதிகளைச் செய்யலாம். அந்த ஒருங்கிணைப்பாளர் அங்கே நடக்கும் மேம்பாடுகளை உங்களிடம் பகிர்ந்த வண்ணம் இருப்பார்.

உதாரணத்திற்கு, நான் சிதம்பரத்திற்கு அருகில் உள்ள `சாக்காங்குடி' என்ற கிராமத்து அரசுப் பள்ளிக்கு மூன்று நாட்கள் Volunteer ஆக சென்றேன். இந்த ஊரில் பிறந்து, வளர்ந்து, இன்று அமெரிக்காவில் வாழுபவர், இது மற்றும் இதன் அருகில் உள்ள ஐந்து பள்ளிகளுக்கு நிதியுதவி வழங்கி வருகிறார்.

இந்தப் பள்ளியில் கல்வியில் பின்தங்கிய நிலையில் உள்ள மாணவர்களைத் தேர்ந்தெடுத்து அவர்களுக்கு கூடுதல் பயிற்சி அளிக்கப்படுகிறது. பத்தாம் வகுப்பு மாணவர்களுக்கு காலை, மாலையிலும் பயிற்சி வகுப்புகள் நடக்கின்றன. இதற்கான கூடுதல் ஆசிரியர்கள், மாணவர்களுக்கான பொருட்களை TNF அமைப்பு செய்து வருகிறது. நான் அந்த மூன்று நாட்களில் அங்குள்ள மாணவர்களின் கல்வியில் என்னால் முயன்ற அளவு உதவி செய்தேன். இதன் மூலம் நம்மால் தமிழ் பண்பாடு, கலாச்சாரம், மொழி ஆகியவற்றை அறிய முடியும். நாமும் இங்குள்ள விஷயங்களை அங்குள்ள மாணவர்களுடன் பகிரலாம்.

TNF மேலும், ஏழைப்பெண்களுக்கு தையல் பயிற்சி அளித்து அவர்களுக்கு மகளிர் குழுக்களில் வேலை வாய்ப்பிற்கும் உதவுகிறது. சீர்காழிக்கு அருகில் `அன்பாலயம்' என்ற அமைப்பின் மூலம் சிறப்பு தேவையுள்ள குழந்தைகளை (Special needs children) பராமரிக்கின்றனர்.




இத்துடன் Center for Medical Genetics (CMG, kilpauk, Chennai) என்ற அமைப்பும் இயங்கி வருகிறது. இதைDr.Vaithialingam G. Dev, Director of Genetics Associates, cytogenetics lab in Tennesse, USA, 2012-ல் நிறுவி உள்ளார். குறையுள்ள குழந்தைகள் பிறப்பதை தடுப்பதே இந்த அமைப்பின் குறிக்கோளாகும். Dr. Dev, Skype மூலமும் Genetic Counseling செய்கிறார். இதற்கு மிகக் குறைந்தக் கட்டணமே (மிகவும் ஏழ்மையில் உள்ளவர்களுக்கு இலவசம்) வசூலிக்கப்படுகிறது.

CMG நிறுவனம், அமெரிக்காவில் இருந்து தமிழ்நாட்டிற்கு ஜூலை மாதத்தில் விடுமுறைக்கு வரும் மாணவர்களுக்கு (8 ஆம் வகுப்பு முடித்த) இலவச internship வழங்குகிறது. இதை நாம் USA பள்ளிக்களின் Volunteer hourக்கு பயன்படுத்தலாம். (நான் 7 ஆம் வகுப்பு முடித்தவுடன் சென்றதால் என்னால் அதைச் செய்ய இயலவில்லை). நாங்கள் மொத்தம் எட்டு பேர் இந்த ஒரு வார internship இல் கலந்து கொண்டோம். நீங்கள் இந்த கோடை விடுமுறைக்கு இந்தியா செல்ல இருந்தால், இந்த வாய்ப்பைப் பயன்படுத்திக் கொள்ளுங்கள். உங்கள் குழந்தைகளின் மருத்துவப் படிப்பு ஆர்வத்தை இது மேலும் ஊக்கப்படுத்தும்.

# தமிழ்நாடு அறக்கட்டளை

## நடேஷ் வைத்தியநாதன்

'சிறு துளி பெரு வெள்ளம்' போல உங்களின் சிறு உதவி -யும் பலரின் மேம்பாட்டுக்கு உதவக் கூடும். பணமாகவோ, பொருளாகவோ, தனிநபராகவோ அல்லது நண்பர்கள், உறவினர்கள் குழுவாகவோ உதவலாம்.

மேலும் விவரங்களுக்கு : www.tnfusa.org
www.cmgsite.org

அடுத்த இந்தியப் பயணத்திற்காகக் காத்திருக்கிறேன்...

நடேஷ் வைத்தியநாதன்
எட்டாம் வகுப்பு, யூனியன் பள்ளி,
தில்சா, OK. USA.




*Providing peace of mind for families since 1954.*

**Miss Helen's Private School**
4849 South Mingo ■ Tulsa, Oklahoma 74146
918.622.2327 ■ www.misshelens.com

## தமிழ் அறிவோம்!!!

### ஆண் பருவம்

பாலன் - 1 முதல் 7 வயது வரை
மீளி - 8 முதல் 10 வயது வரை
மறவோன் - 11 முதல் 14 வயது வரை
திறவோன் - 15 வயது
விடலை - 16 வயது
காளை - 17 முதல் 30 வயது வரை
முதுமகன் – 31 வயது முதல்

### பெண் பருவம்

பேதை - 1 முதல் 8 வயது வரை
பெதும்பை - 9 முதல் 10 வயது வரை
மங்கை - 11 முதல் 14 வயது வரை
மடந்தை - 15 முதல் 18 வயது வரை
அறிவை - 19 முதல் 24 வயது வரை
தெரிவை - 25 முதல் 29 வயது வரை
பேரிளம் பெண் - 30 வயது முதல்

### பரம்பரை

தந்தை - தாய்
பாட்டன் - பாட்டி
பூட்டன் - பூட்டி
ஓட்டன் - ஓட்டி
சேயோன் - சேயோள்
பரன் - பரை
ஏழாவது தலைமுறையை தான் பரம்பரை (பரன்+ பரை) என்கின்றோம்

### பெரும்பொழுதுகள்

ஒரு வருடத்தை ஆறு பெரும் பொழுதுகளாக பிரித்தனர் அவை
இளவேனில் - சித்தரை, வைகாசி
முதுவேனில் - ஆனி, ஆடி
கார் - ஆவணி, புரட்டாதி
கூதிர் - ஐப்பசி, கார்த்திகை
முன்பனி - மார்கழி. தை
பின்பனி - மாசி, பங்குனி


### சிறுபொழுதுகள்

ஒரு நாளில் அடங்கிய ஆறு சிறுபொழுதுகள்
வைகறை
காலை
நண்பகல்
ஏற்பாடு
மாலை
யாமம்

* இவை அனைத்தும் இணையத்தில் இருந்து சுடப்பட்டது. சுட்டவர் ராஜபெருமாள் ராமசந்திரன்

# ராஜூ

*சிறுகதை - லக்ஷ்மிஸ்ரீ சிவகுமார், வயது எட்டு*



ஒரு ஊரில் ஒரு பையன் இருந்தான். அவன் பெயர் ராஜூ. ராஜூவுக்கு வயது பத்து. ஒரு நாள் அவன் அப்பா அவனிடம் வீட்டுப்பாடங்களை முடிக்க சொன்னார். ராஜூவுக்கு படிப்பில் நாட்டம் இல்லை. அதனால் என்றைக்கும் போல் இன்றும் தனது கதையை ஆரம்பித்தான். "அப்பா இனிக்கு தொலைகாட்சியில் வரும் ஒரு நிகழ்ச்சியை ஆசிரியர் பார்த்து வர சொன்னார். நாளை அதிலிருந்து கேள்வி கேட்பதாக சொல்லி இருக்கார்" என்று சொல்லி தன் அறைக்கு சென்று அவனுக்கு பிடித்த நிகழ்ச்சியை பார்க்கலானான். ஒரு மணி நேரம் கழித்து அவன் அப்பா மருபடியும் அவனுக்கு வீட்டுபாடம் முடிக்கும் படி நினைவு படுத்தினார். "அப்பா ரொம்ப பசிக்கிறது. நான் ஒரு மாம்பழம் சாப்புட்டு பண்றேன்"னு சொல்லி மாம்பழம் சாப்பிடலானான். சிறிது நேரத்திற்க்கு பிறகு அவன் அப்பா மீண்டும் அவனுக்கு நினைவு படுத்தினார். பிறகு அப்பா ஏதோ வேலையாக வெளியில் சென்று வந்தார். இரவு சாப்பாட்டிற்கான நேரமும் வந்தது. அம்மா அனைவருக்கும் உணவு பரிமார அனைவரும் சாப்பிட்டு விட்டு படுக்கைக்கு சென்றனர். அப்பா அவனிடம் வீட்டுப்பாடம் முடித்தாயா என்றார். ராஜூ முடித்துவிட்டேன் அப்பா என்று பொய் சொல்லி சென்றான். என்றும் இல்லாது அன்று அடுத்த நாள் பள்ளியில் ஆசிரியரிடம் வசமாக மாட்டிக்கொண்டான் ராஜூ. அத்துடன் அன்று பரிட்சை முடிவும் வந்தது. அதில் வகுப்பறையிலேயே கம்மியான மதிப்பெண்ணும் வங்கி இருந்தான். படிப்பில் கவனம் இல்லாத ராஜூவின் மேல் கோபப்பட்டார் ஆசிரியர். அவனை வகுப்பறைக்கு வெளியில் நாள் முழுக்க முழங்கால் இட்டு நிற்க வைத்தார். அத்துடன் வினா தாளில் பெற்றோரின் கையொப்பம் பெற்று வர சொன்னார். ராஜூவின் மனம் வேதனை பட்டது. அன்று நாள் முழுக்க வகுப்பில் பாடம் கவனிக்க முடியாமல் போனதுடன் மற்ற வகுப்பு பிள்ளைகளும் ஏளனமாக பார்க்க கூனி குறுகி போனான் ராஜூ. அன்று இத்தனை நாட்களாக அவன் செய்து வந்த தவறுகள் அனைத்தும் அவனுக்கு புரிய ஆரம்பித்தது. அன்று வீட்டிற்கு சென்ற ராஜூ தான் இத்தனை நாள் செய்த அத்தனை தவறுகளையும் தன் பெற்றோரிடம் சொல்லி அழுதான். அத்துடன் இனி இவ்வாறு செய்வதில்லை என்றும் படிப்பில் கவனம் செலுத்துவதாகவும் உறுதியளித்தான். அன்று முதல் அவ்வாறே நடக்கவும் ஆரம்பித்தான். நன்றாக படித்து நல் மதிப்பெண் எடுத்து ஆசிரியரிடம் பாராட்டும் பெற்றோரின் அன்பிற்கும் பாத்திரமானான் ராஜூ. நாமும் ராஜூவை போல் நற்பிள்ளைகளாக வளர்வோம். பெற்றோருக்கும் நாட்டுக்கும் பெருமை சேர்ப்போம்.

**With Best Compliments From:**

**Dr. Suresh Bharani M.D., F.A.A.P**


**3300 South Aspen Ave, Suite B**

**Broken Arrow, OK 74012**

**Ph: (918) 455 4140**

**http://www.drbharani.com**

# ஏ. பி. ஜே. அப்துல் கலாம்



இந்தியாவின் தலைசிறந்த விஞ்ஞானி, தொழில்நுட்ப வல்லுநர், மிகப்பெரிய பொறியாளர் இந்தியாவின் 11 வது குடியரசு தலைவர், இந்திய ஏவுகணை நாயகன், இந்திய விஞ்ஞான வளர்ச்சியின் தந்தை, சிறந்த ஆசிரியர் மற்றும் அனைவராலும் மதிக்கதக்க அற்புதமான பேச்சாளர், வருங்கால இளைஞர்களின் முன்மாதிரியாக கருதப்படும் நம் எல்லோருக்கும் தெரிந்த ஏ.பி.ஜே அப்துல் கலாமின் வாழ்க்கை வரலாற்றை பற்றி மேலும் தெரிந்துகொள்ள மேலும் படியுங்கள்.

**பிறப்பு:** 1931 ஆம் ஆண்டு, அக்டோபர் மாதம் 15 ஆம் நாள் ஜைனுலாப்தீனுக்கும், ஆஷியம்மாவுக்கும் மகனாக இந்தியாவின் தமிழ்நாடு மாநிலத்தில், பாம்பன் தீவில் அமைந்துள்ள இராமநாதபுரம் மாவட்டத்தில் இருக்கும் ஒரு சிறிய நகராட்சியான இராமேஸ்வரத்தில் பிறந்தார். இவர் ஒரு இஸ்லாமிய குடும்பத்தை சேர்ந்தவர்.




**இளமைப்பருவம்:** அப்துல் கலாம், இராமேஸ்வரத்திலுள்ள தொடக்கப்பள்ளியில் தனது பள்ளிப்படிப்பை தொடங்கினார். ஆனால் இவருடைய குடும்பம் ஏழ்மையில் இருந்ததால், இளம் வயதிலே இவர் தன்னுடைய குடும்பத்திற்காக வேலைக்குச் சென்றார். பள்ளி நேரம் போக மற்ற நேரங்களில் இவர் செய்தித்தாள்கள் விநியோகம் செய்தார். இவருடைய பள்ளிப்பருவத்தில் இவர் ஒரு சராசரி மாணவனாகவே வளர்ந்தார்.

**கல்லூரி வாழ்க்கை:** தன்னுடைய பள்ளிப்படிப்பை முடித்தபிறகு, திருச்சிராப்பள்ளியிலுள்ள "செயின்ட் ஜோசப் கல்லூரியில்" இயற்பியல் பயின்றார். 1954ஆம் ஆண்டு, இயற்பியலில் இளங்கலை பட்டம் பெற்றார். ஆனால், இயற்பியல் துறையில் ஆர்வம் இல்லை என உணர்ந்த இவர், 1955 ஆம் ஆண்டு தன்னுடைய "விண்வெளி பொறியில் படிப்பை" சென்னையிலுள்ள எம்.ஐ.டி–யில் தொடங்கினார். பின்னர் அதே கல்லூரியில் முதுகலைப் பட்டமும் பெற்றார்.

**விஞ்ஞானியாக ஏ.பி.ஜே அப்துல் கலாம்:** 1960 ஆம் ஆண்டு வானூர்தி அபிவிருத்தி அமைத்தல் பிரிவில் (DRDO) விஞ்ஞானியாக தன்னுடைய ஆராய்ச்சி வாழ்க்கையைத் தொடங்கிய அப்துல் கலாம், ஒரு சிறிய ஹெலிகாப்டரை இந்திய ராணுவத்திற்காக வடிவமைத்து கொடுத்தார். பின்னர், இந்திய விண்வெளி ஆராய்ச்சி கூடத்தில் (ISRO) தனது ஆராய்ச்சிப்பணிகளைத் தொடர்ந்த அவர், துணைக்கோள் ஏவுகணைக் குழுவில் (SLV) செயற்கைக்கோள் ஏவுதலில் முக்கிய பங்காற்றினார். 1980 ஆம் ஆண்டு SLV –III ராக்கெட்டைப் பயன்படுத்தி ரோகினி–I என்ற துணைக்கோளை வெற்றிகரமாக விண்ணில் ஏவச்செய்தார். இது அவருக்கு மட்டுமல்லாமல், இந்தியாவிற்கே ஒரு சாதனையாக அமைந்தது. இத்தகைய வியக்கதக்க செயலைப் பாராட்டி மத்திய அரசு இவருக்கு 1981 ஆம் ஆண்டு இந்தியாவின் மிகப் பெரிய விருதான "பத்ம பூஷன்" விருது வழங்கி கௌரவித்தது. 1963 ஆம் ஆண்டு முதல் 1983 ஆம் ஆண்டு வரை, இந்திய விண்வெளி ஆராய்ச்சி கூடத்தில் பல பணிகளை சிறப்பாக செய்த இவர், 1999 ஆம் ஆண்டு "பொக்ரான் அணு ஆயுத சோதனையில்" முக்கிய பங்காற்றியுள்ளார். இந்தியாவை அணு ஆயுத வல்லரசாக மாற்றிய ஏ.பி.ஜே அப்துல் கலாம், இதுவரை ஐந்து ஏவுகணை திட்டங்களில் பணிபுரிந்துள்ளார். அவர், அனைவராலும் இந்திய ராணுவ ராக்கெட் படைப்பின் பிதாவாக போற்றப்படுகிறார்.

# ஏ. பி. ஜே. அப்துல் கலாம்

**குடியரசுத் தலைவராக ஏ.பி.ஜே அப்துல் கலாம்**: 2002 ஆம் ஆண்டு நடந்த குடியரசுத் தலைவர் தேர்தலில் வெற்றி பெற்று, இந்தியாவின் 11 வது குடியரசு தலைவராக ஜுலை 25 ஆம் நாள் 2002 ல் பதவியேற்றார். குடியரசு தலைவராவதற்கு முன், இந்தியாவின் மிகப்பெரிய விருதான "பாரத ரத்னா விருது" மத்திய அரசு இவருக்கு வழங்கி கௌரவித்தது. மேலும், "பாரத ரத்னா" விருது பெற்ற மூன்றாவது குடியரசு தலைவர் என்ற பெருமையைப் பெற்றார். 2007 ஆம் ஆண்டு வரை குடியரசுத் தலைவராக இருந்த இவர் "மக்களின் ஜனாதிபதி" என்று அனைவராலும் அன்போடு அழைக்கப்பட்டார். 2007 ஆம் ஆண்டு குடியரசுத் தேர்தலில் மீண்டும் போட்டியிட நினைத்த கலாம், பிறகு பல காரணங்களால் அந்த தேர்தலில் போட்டியிட போவதில்லை என முடிவு செய்து விலகினார்.



## கலாமின் பொன்மொழிகள்

கனவு காணுங்கள், திட்டமிடுங்கள், செயற்படுங்கள்.

கனவு என்பது நீ தூக்கத்தில் காண்பது அல்ல, உன்னை தூங்க விடாமல் செய்வது எதுவோ அதுவே கனவு

உன் கை ரேகையை பார்த்து எதிர் காலத்தை நிர்ணத்து விடாதே.. ஏனென்றால் கையே இல்லாதவன் கூட எதிர்காலம் உண்டு.

ஆண்டவன் சோதிப்பது எல்லோரையும் அல்ல உன்னை போல சாதிக்க துடிக்கும் புத்திசாலிகளை மட்டுமே

நமது பிறப்பு ஒரு சம்பவமாக இருக்கலாம், ஆனால் இறப்பு ஒரு சரித்திரமாக இருக்க வேண்டும்.

| | |
|---|---|
| 1981 – பத்ம பூஷன் | 2007 – கிங் சார்லஸ்-II பட்டம் |
| 1990 – பத்ம விபூஷன் | 2008 – பொறியியல் டாக்டர் பட்டம் |
| 1997 – பாரத ரத்னா | 2009 – சர்வதேச வோன் கார்மான் விங்ஸ் விருது |
| 1997 – தேசிய ஒருங்கிணைப்பு இந்திராகாந்தி விருது | 2009 – ஹூவர் மெடல் |
| 1998 – வீர் சவர்கார் விருது | 2010 – பொறியியல் டாக்டர் பட்டம் |
| 2000 – ராமானுஜன் விருது | 2012 – சட்டங்களின் டாக்டர் |
| 2007 – அறிவியல் கவுரவ டாக்டர் பட்டம் | 2012 – சவரா சம்ஸ்க்ருதி புரஸ்கார் விருது |

## ஏ.பி.ஜே அப்துல் கலாம் எழுதிய நூல்கள்:

- அக்னி சிறகுகள்
- இந்தியா 2020
- எழுச்சி தீபங்கள்
- அப்புறம் பிறந்தது ஒரு புதிய குழந்தை

**இயற்கை மறைவு**: அப்துல் கலாம் அவர்கள் ஜுலை 27, 2015 ஷில்லாங்கில் உள்ள இண்டியன் இன்ஸ்டிடியூட் ஆஃப் மேனேஜ்மென்ட்டில் மேடையில் பேசிக்கொண்டிருந்தபோதே மயங்கி விழுந்து மறித்தார்.

இறுதிவரைக்கும் பிரம்மச்சாரியாக வாழ்ந்த ஏ.பி.ஜே அப்துல் கலாமின் எளிமையான வாழ்க்கையும், அவரது இனிமையான பேச்சும் எல்லோரையும் கவர்ந்தது வியப்பில்லை. 'எதிர்கால இந்திய இளைஞர்கள் கையில்' என்ற அவர் "கனவு காணுங்கள்! அந்த கனவை நினைவாக்க பாடுபடுங்கள்" என்னும் வாக்கியத்தை இளைஞர்களின் மனதில் வேரூன்ற செய்தவர். உலகம் போற்றும் விஞ்ஞானியான கலாம் தன்னுடைய பொன்மொழிகளாலும், கவிதைகளாலும், வாசகங்களாலும் அனைவரின் மனதிலும் நீங்கா இடம் பிடித்துள்ளார்.

– தொகுத்து வழங்கியது தினேஷ் ஸ்ரீனிவாசன்

AUTHENTIC
Kumar's
INDIAN FOOD

# KUMAR'S

## south indian village cuisine




We specialize in authentic **South Indian mess food**, that is cooked using village style recipes. We don't use Food Color, no MSG or no other artificial ingredients. Everything is made from scratch, using raw spices.

We also do **catering**, to make your event a wonderful memory!

www.kumarmessusa.com


Phone: (469) 666 0682

1301 Custer Rd, Suite 510, Plano - TX 75075

*(Intersection of Custer and 15 th street, near Albertsons)*

வந்து சாப்பிட்டு பாருங்க...

சும்மா, செமையா இருக்கும்!!


Kripalaya Dance Academy
Director: Priya Raju
Ph: 918-760-2248
www.kripalaya.com
www.facebook.com/kripalaya
Oklahoma Tamil Sangam

XYANT TECHNOLOGY, INC.

1218 W. Rock Creek Road
Norman, OK 73069
405-447-8337
405-447-8394 (Fax)
info@xyant.com
www.xyant.com

**With Best Wishes**
from
**XYANT Incorporated**

**Rajappa Sreenivasan**
**President**